யில்தான் இருந்தது. 16ஆம் தேதிகூட புகைவண்டி நிலையத்தில் 3 மின் விளக்குகள் எரியாமல்தான் இருந்தது. இதைப் பற்றி புகைவண்டி நிலைய ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டதற்கு வோல்டேஜ் குறைவாக இருக்கிறது என்று கூறி உள்ளார். எனது மருத்துவமனைக்குச் சொந்தமான எக்ஸ் ரே....

10-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அரசு அறியுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, இவர் ஊரை விட்டு வருகிறபோது மின் அழுத்தம் குறைவாக இருந்து இருக்கலாம். இவர் ஊர் போய்ச் சேருகிறபோது அது சரி செய்யப்பட்டு இருக்கும். அடுத்த முறை அவர் வந்து பாராட்டுத் தெரிவிப்பார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 டிரான்ஸ்பார்மர் சரியாக இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால்தான் வோல்டேஜ் குறைவாகஇருப்பதாக மின் வாரிய ஊழியர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாதையைமாற்றி அமைப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொருத்தமட்டில் மின் விளக்குகள் எரிந்தால் போதும். இப்போது மாணவர்கள் அரசு தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் அரசு, மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மின்விளக்குகள் எரிவதற்கு வழி செய்ய மாண்புமிகு அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, எல்லோருடைய நலத்தையும் கருத்தில் கொண்டு இப்போது மின் அழுத்தம் சீரமைக்கப்பட்டு இருப்பதால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் எதிர்க்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லாமல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே வரியில் ''எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் : அவ்வளவுதான். (குறுக்கீடு) ஒரே வரியில் தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ''அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் அல்லது அடுத்த நிகழ்ச்சிக்குப் போகட்டுமா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று தெரிவித்து இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.